"லக்ஸம்பர்க் ராணி இவைகளை ஆக்ஷேபிக்கிருள். இதெல்லாம், ஏற்கனவே செய்துகொண்ட உடன்படிக்கைகளுக்கும், பரஸ்பர—தேச—சட்டங்களுக்கும் எதிரான காரியங்கள். லக்ஸம்பர்க் ராணியாவது, பிரஜைகளாவது ஒருவிதத்திலும் ஒழுங்கு தவறி நடந்ததில்லை. சிறிய தேசமென்று ஜெர்மனி வெகு அநியாயம் செய்கிறது.

லக்ஸம்பர்க், லக்ஸம்பர்க் ராணி, லக்ஸம்பர்க் கவர்ன்மெண்டு, லக்ஸம்பர்க் பிரஜைகளனைவரும் சேர்ந்து இந்த ஆக்ஷேபத்தை உலகத்துக்குப் பிரசுரிக்கிருர்கள். சென்ற வருஷத்தில்தான் லக்ஸம்பர்க் தன் ஸ்வதந்திரத்தைக் கொண்டாடிற்று. இப்போழுதும், சுயேச்சையிருந்தால், ஸ்வதந்திரத்தைவேண்டி ராஜ விஸ்வாஸத்தையும் பிரஜைகள் காண்பிப்பார்கள்."

இந்த வாரத்திய விமான எதிர்ப்புகளின் விவரம் கீழே பார்க்கலாம்.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டமும், படையெடுப்பின் விளைவுகளும்.
16—9—40. (திங்கட்கிழமை).			
	பகலில்.—வேவுபார்த்தல்.—இங்கிலீஷ் கால்வாயின் கீழ்க்கரை முழுவதும்.	......	ஜெர்மன் படைகள் இருக்கும் இடங்கள் கண்டுபிடிக்கப் பட்டன.
	பிரிடன்மீது படையெடுப்பதற்கு வசதியான துறைமுகங்கள்.—கலே (Calais), ஆஸ்டெண்ட் (Ostend), டன்கர்க் (Dunkirk).	......	கரைமுழுவதும் ஒரே தீஜ்வாலை.
	சிறிய கப்பல்கள்.— வீர்(Veere), டன்கர்க் (Dunkirk), ஆஸ்டெண்ட் (Ostend). துணைக்காவல் கப்பல்கள்.—ஷீப்ரக் (Zeebrugge).	......	அநேக பெரிய கப்பல்கள் சிறிய கப்பல்கள் நாசமாயின.
	தானுக செல்லக்கூடிய சிறிய கப்பல்கள்.—ஆஸ்டெண்ட் (Ostend) துறைமுகத் துக்கப்பால்.		

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டமும், படையெடுப்பின் விளைவுகளும்.
16—9—40 (திங்கட்கிழமை)—தொடர்ச்சி.			
	இரவில்.—காலநிலை பாதகமாயிருந்தபடியால் இன்று படையெடுப்பு இல்லை.		
	விமான நிலயம்.—எரிடிரியாவி (Eritrea) லுள்ள அஸ்மாரா (Asmara).	......	சேதமாயிற்று.
	மோட்டார் வண்டிகள்.—பாக்பாக் (Bagbag).	நஷ்டமில்லை.	அநேக இடங்கள் தீப்பிடித்தன.
	கடல்விமான நிலையம்.—பென்காஸி (Ben Ghasi).	......	ஒரு டார்பிடோபடகு மூழ்கியது.
17—9—40. (செவ்வாய்க்கிழமை).			
	துறைமுகங்கள், பீரங்கிகள் இருக்கும் இடங்கள், கப்பல் கூட்டங்கள்.—கலே (Calais), செர்பரோ (Cherbourg) ஆஸ்டெண்ட் (Ostend), டன்கர்க் (Dunkirk), புலாயின் (Boulogne), ஷீப்ரக்(Zeebrugge) முதலிய இன்னும் அநேக பிரஞ்சு (French), பெல்ஜியன் (Belgian), டச்சு (Dutch) துறைமுகங்கள்.	......	எங்கும்தீப்பிடித்தது. செர்பரோவில் அநேக கப்பல்கள் உடைக்கப்பட்டன. மற்றும் சில தீயால் நாசமாயின. அநேக கட்டடங்கள் நாசமாயின.
	சிறிய கப்பல்கூட்டங்கள்.—ஷீப்ரக் (Zeebrugge)	......	சில நீரில் மூழ்கின. அநேகம் நாசமாயின.
	விமான நிலயங்கள்.—எமூய்டன் (Ymuiden), ஆஸ்டெண்ட் (Ostend) துறைமுகங்கள்.	......	சேதமாயின.
	ரயில்வண்டிகள் நிற்குமிடங்கள், ஜங்க்ஷன்கள்—ஹாம்பர்க் (Hamburg).		
	கேந்திர ஸ்தானங்கள்.—க்ரபெல்டு (Krefeld), ஹாம் (Hamm), எராங் (Ehrang), ஆஸ்னுப்ரக் (Osnabruck), ஸோயஸ்ட் (Soest), ப்ரஸ்ஸல்ஸ் (Brussels).	......	எல்லாம் சிதறடிக்கப்பட்டன.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டமும், படையெடுப்பின் விளைவுகளும்.
17—9—40. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.			
	சாமான் கிடங்குகள்.—ஸ்டாக்கும் (Stockum), டர்ன்யூஸன் (Terne-uzen), பளஷிங் (Flushing).	......	தீப்பிடித்தன.
	விமான நிலயங்கள்—பென்காஸி (Ben Ghasi), எரிடிரியா், இதாலிய ஸோமாலி லாண்ட் (Somaliland).	......	சேதமாயின. தரையிலிருந்த விமானங்களில் தீப்பிடித்தது.
	பீரங்கிகள்.—ஸிடி எல்பரானி (Sidi el Barrani).	......	தகர்க்கப்பட்டது.
18—9—40. (புதன்கிழமை).			
	படை யெடுக்கஉதவும் துறைமுகங்கள்.—ஆண்ட்வெர்ப் (Antwerp), ஷீப்ரக் (Zeebrugge), டன்கர்க் (Dunkirk), ஆஸ்டெண்ட் (Ostend), கலே (Calais), புலாயின் (Boulogne), டீயப் (Dieppe), லாஹவேர் (Le Havre).	......	தீப்பிடித்தெரிந்தது. கப்பல்களும், யுத்த தளவாடங்களும் நாசமாயின.
	கேந்திர ஸ்தானங்கள்.— ஆஸ்னாப்ரக் (Osnabruck), எராங் (Ehrang), ஹாம் (Hamm), மான்ஹீம் (Monheim), ப்ரஸ்ஸெல்ஸ் (Brussels).		
	துணைக்காவல் கப்பல்கள்.—போகும் (Bokum).	......	ஒரு நாசகாரிமேல் குண்டு விழுந்தது.
	சேர்பரோ.—(Cherbourg) துறைமுகம்.		
	கப்பல்கள்.—டச்சு (Dutch) கடற்கரை.	......	அநேகம் நாசமாயின.
	விமான நிலயங்கள்.—டீகாய் (Dekooy), இன்னும் அநேக இடங்களில்.		
	துருப்புகள் அணிவகுக்குமிடம்.—ஜெர்மனி (Germany), விரோதி ஆக்ரமிருத்திருக்கும் நாடுகள்.	7 விமானங்கள்.	தீப்பிடித்தது.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டமும், படையெடுப்பின் விளைவுகளும்.
18—9—40. (புதன்கிழமை)—தொடர்ச்சி.			
	விரோதிகளின் முக்கிய நிலயங்கள்.—டோடிகானீஸாவி (Dodecanese)லுள்ள மாய்டோ (Maito), கலாடோ (Calato), போர்டோலாகோ (Portolago) வளைகுடா.	நஷ்டமில்லை.	தீயும், வெடிச்சத்தமும் கிளம்பின; எண்ணெய்க் கிடங்குகள் நாசமாயின.
	விமான நிலயங்கள்.—டெர்ணு (Derna), மொகாடிஸ்ஸியோ (Mogadiscio), லாவல்லோ (Lavello) கஸாலா (Kassala), அஸ்ஸாப் (Assab), டிரிடாவா (Diredawa).	1 விமானம்.	அநேக இடங்களில தீப்பிடித்தன.
	கட்டடங்கள்.—டொப்ருக் (Tobruk) ...		
	மோட்டார் வண்டிகள்.-ஸோலம் (Sollum) ஸிடி எல் பரானி (Sidi El Barrani).	......	நாசமாயின.
	விமானங்கள்.—எல் மிமி (El Tmimi), பொம்பா (Bomba), பார்டியா (Bardia), காபுஸ்ஸோ (Capuzzo)—ஸோலம் (Sollum).	1 விமானம்.	அதிகச்சேதம்.
19—9—40. (வியாழக்கிழமை).			
	படையெடுக்க உதவும் துறை முகங்கள்.—கலேயி (Calais) லிருந்து புலாயின் (Boulogne) வரையுள்ள கடற்கரை.	......	தீப்பிடித்தெரிவது இக்கரையில் தெரிந்தது.
	ரயில் பாதைகள்; போக்குவரத்து சாதனங்கள்.—ஜெர்மனியி (Germany)ல் டார்ட்மண்ட் (Dortmund)—எம்ஸ் (Ems) கால்வாய் இன்னும் மற்ற இடங்கள்.	......	போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்பட்டு இருக்கிறது.
	ரைன்லாண்டு (Rhaineland)—ஜெர்மனியில்.		
	துறை முகங்கள்.—ஆஸ்டெண்ட் (Ostend) ப்ளஷிங் (Flushirg).		நாசமாயின.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டமும், படையெடுப்பின் விளைவுகளும்.
19—9—40. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி.			
	ரயில் வண்டிகள் நிற்குமிடங்கள்.—மான்ஹீம் (Monheim), எராங் (Ehrang) காப்லென்ஸ் (Coblenz).		தீப்பிடித்தன.
	விமான நிலயங்கள்.—மன்ஸ்டர் (Munster) ஹான்ஸ்டார்ப் (Hansdorf), பெர்கன் ஆப்ஷூம் (Bergen Op Zoom), டிரிடாவா (Diredawa).	நஷ்டமில்லை.	உபயோகமில்லாமல் போய் விட்டன.
	பெரிய கப்பல்கள்.—பென்காஸி (Benghasi) துறைமுகம்.		3 கப்பல்கள் தீக்கிரையாயின.
	மோட்டார் வண்டிகள்.—ஸிடி எல் பரானி (Sidi El Barrani).		
20—9—40. (வெள்ளிக்கிழமை).			
	விரோதி ஆக்ரமித்திருக்கும் துறைமுகங்கள்.—ஆண்ட்வர்ப் (Antwerp), ஷீப்ரக் (Zeebrugge), ஆஸ்டெண்ட் (Ostend), ப்ளஷிங் (Flushing), டன்கர்க் (Dunkirk), கலே (Calais), புலாயின் (Boulogne).	.. ...	சண்டை ஆரம்பித்ததிலிருந்து பெரிய விமானப் படையெடுப்பு. எங்கும் தீ கொழுந்து விட்டு எரிந்தது.
	ராணுவ தளவாடங்கள், சிறிய கப்பல்கள், பெரிய கப்பல்கள்.—கலேயி (Calais) விருந்து புலாயின் (Boulogne) வரையில் உள்ள கடற்கரை.		அநேகம் நாசமாயின.
	கேந்திர ஸ்தானங்கள், சாமான் கிடங்குகள்.—மான்ஹீம் (Monheim), எராங் (Ehrang), கரபெல்ட் (Krefelt), ஹாம் (Hamm), ஸோயஸ்ட் (Soest), ஆஸ்னுப்ரக் (Osnabruck), ப்ரஸ்ஸெல்ஸ் (Brussels) டார்ட்மண்ட்-எம்ஸ் (Dortmund-Ems) கால்வாய்.		தீப்பிடித்தன.
	ரயில் பாதைகள்.—டூயிபர்க் (Duisburg).		
	சாமான் ரயில்வண்டி, வெடிமருந்து ஆலை.—மாஸ்டிரிக்டு (Mastricht) க்கு அருகில்.	2 விமானங்கள்	

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டமும், படையெடுப்பின் விளைவுகளும்.
20—9—40. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.			
	பேர்லின் (Berlin), ஹாம்பர்க் (Hamburg) அநேக விரோதி விமான நிலயங்கள்.		அதிகச்சேதம்
	2 சாமான் கப்பல்கள்.—இங்கிலீஷ் கால்வாய்.		சேதமாயின.
	விமானங்கள்.—மெனுஸ்டிர் (Menastir).		
	மோட்டார் வண்டிகள்.—ஸிடி எல் பரானி (Sidi El Barrani) டிரிடாவா (Diredawa), பெர்பரா (Berbera).		அதிகச்சேதம்.
	குரா (Gura) விமான நிலயம்.—அபிஸீனியா (Abyssinia).		
21—9—40. (சனிக்கிழமை).			
	ப்ளஷிங் (Flushing).—துறைமுகம்.		
	சிறிய கப்பல் கூட்டங்கள்.—ஆண்ட்வர்ப் (Antwerp), ராட்டர்டாம் (Rotterdam), ஆஸ்டெண்ட் (Ostend), டர்ன்யூஸென் (Terneuzen), கலே (Calais), ஸெயிண்ட் ஓமர் (St. Omer) கால்வாய்.	......	அநேகம் மூழ்கடிக்கப்பட்டன, சில தீக்கிரையாயின.
	இரவில் படையெடுக்க உபயோகப்படும் துறைமுகங்கள்.-ஆஸ்டெண்ட் (Ostend), டன்கர்க் (Dunkirk), ஷிப்ரக் (Zeebrugge), புலாயின் (Boulogne).	நஷ்டமில்லை.	தீப்பிடித்தன.
	விமான நிலயங்கள், துருப்புகள்.—ஸிடி எல் பரானி (Sidi el Barrani).		
	விமான நிலயங்கள்.—பர்கோ (Birkao), டெஸ்ஸேனி (Tesseni).	நஷ்டமில்லை.	தீப்பிடித்தன.
22—9—40. (ஞாயிற்றுக்கிழமை).			
	பெர்லின் (Berlin)—2½-மணி சாவகாசம்.	1 விமானம்.	பெருத்த நஷ்டம்.
	அலுமினியம் ஆலைகள், ரயில் வண்டிகள்.—லாடா (Lauta), ஒரு சாமான் ஏற்றிச் செல்லும் ரயில்வண்டி—ட்ரஸ்டன் (Dresden).	......	குண்டுகள் விழுந்தன

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டமும், படையெடுப்பின் விளைவுகளும்.
22—9—40. (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி.			
	துறைமுகங்கள், கப்பல்கள்.—ப்ளஷிங் (Flushing), ஆண்ட்வர்ப் (Antwerp), டன்கர்க் (Dunkirk), ஆஸ்டெண்ட் (Ostend), ஷீப்ரக் (Zeebrugge), கலே (Calais), லாஹவேர் (Le Havre), ஹார்ப்ளுயர் (Harfluer), ப்ரஸ்ட் (Brest).	......	சிதறடிக்கப்பட்டன.
	கப்பல் கட்டுமிடங்கள்.—மோல் (Mole).	......	தீப்பிடித்தன.
	விமான நிலயங்கள்.—மெனுஸ்டீர் (Menastir), மாய் அடாகா (Mai Adaga), ட்யூரா (Dura), எல் காடுலோ (El Katulo), டிமோ (Dimo).		
	மோட்டார் வண்டிகள்.—ஸிடி எல் பராணி (Sidi el Barrani), இதாலிய ஸோமாலியலாண்டி (Somaliland)ல் பிரிகா (Birikau).	......	குண்டுகள் விழுந்தன

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	பிரிடிஷாரின் நஷ்டமும், அவற்றின் விளைவுகளும்.
17—9—40. (செவ்வாய்க்கிழமை).			
	காலையில்.—தெற்கு, தென்கிழக்கு இங்கிலாந்து தென்மேற்கு லண்டன் (London), போர்ட்ஸ்மத் (Portsmouth).	......	சொற்பச்சேதம்.
	பிற்பகலிலும், மாலையிலும்.—கெண்ட் (Kent).	......	அநேக அழகான கட்டடங்கள் நாசமாயின; சிலருக்குக் காயம்.
	இரவில்.—லண்டன் (London), ஸஸ்ஸெக்ஸ் (Sussex), ஸர்ரே (Surrey), தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம். மால்டா (Malta).	12 விமானங்கள்	3 விமானங்கள் 2 விமானிகள் உயிர்தப்பினர். குண்டுகள் எறியப்படவில்லை.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	பிரிடிஷாரின் நஷ்டமும், அவற்றின் விளைவுகளும்.
18—9—40. (புதன்கிழமை).			
	காலையில்.—தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம்.		
	பிற்பகலிலும், மாலையிலும்.—லண்டன் (London), கெண்ட் (Kent), தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரத்தினருகே சில பட்டணங்கள்.	......	சிலருக்குக்காயம்.
	இரவில்.—லண்டன் (London) பிரதேசம், மர்ஸிஸைட் (Merseyside), லங்காஷயர் (Lancashire).	....	சில கட்டடங்கள் நாசமாயின. தீப்பிடித்தது; சீக்கிரம் அணைக்கப்பட்டது.
	பட்டணங்கள்.—கெண்ட் (Kent), எஸ்ஸெக்ஸ் (Essex), மிட்லண்ட்ஸ் (Midlands), ஸஸ்ஸெக்ஸ் (Sussex), பர்க்ஷயர் (Berkshire).	...... 48 விமானங்கள்	பலருக்குக்காயம். 12 விமானங்கள் 9 விமானிகள் பத்திரம்.
	மால்டா (Malta)	... 2 விமானங்கள்	......
19—9—40. (வியாழக்கிழமை).			
	பகலில்.—கிழக்கு லண்டன் (London).	......	காலநிலை சரியில்லாததால் விமான நடவடிக்கை அதிகமில்லை.
	கடற்கரைப் பட்டணங்கள்.—எஸ்ஸெக்ஸ் (Essex), ஸஸ்ஸெக்ஸ் (Sussex) மேற்கு இங்கிலாந்தில் ஒரு இடம்.	......	தீப்பிடித்தது; ஆனால் சீக்கிரம் அணைக்கப்பட்டது.
	இரவில்.—லண்டன் பிரதேசம் (London Area), லங்காஷயர் (Lancashire), எஸ்ஸெக்ஸ் (Essex), ஸர்ரே (Surrey), பர்க்ஷயர் (Berkshire), கெண்ட் (Kent), மிட்லண்ட்ஸ் (Midlands).	...... 5 விமானங்கள்	சிலருக்குக்காயம், சிலர் இறந்தனர், சில கட்டடங்கள் நாசமாயின. நஷ்டமில்லை.
20—9—40. (வெள்ளிக்கிழமை).			
	காலையில்.—கெண்டிஷ் (Kentish) கடற்கரை, பிரைடன் (Brighton), தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம்.	......	லண்டனை அணுகவில்லை. சிலருக்குக்காயம்.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	பிரிடிஷாரின் நஷ்டமும், அவற்றின் விளைவுகளும்.
20—9—40. (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.			
	பகலில்.—படையெடுப்பு இல்லை ...	......	......
	இரவில்.—லண்டன் (London) பிரதேசம்	4 விமானங்கள்.	நஷ்டமில்லை. சொற்பசேதம். சிலருக்குக்காயம்.
21—9—40. (சனிக்கிழமை).			
	பகலில்.—லண்டனி (London)ன் சுற்றுப் புறங்கள், ஸஸ்ஸெக்ஸ் (Sussex), எஸ்ஸெக்ஸ் (Essex).	......	மும்முரமில்லை. சேதமும் இல்லை.
	மாலையிலும், இரவிலும்.—தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம்.	......	சிற்சில இடங்களில் தீப்பிடித்தது; ஆனால் உடனே அணைக்கப் பட்டு விட்டது. சிலருக்குக்காயம்.
	பட்டணங்கள்.—தென்கிழக்கு இங்கிலாந்து, லண்டனில் தெற்கு, கிழக்குப் பிரதேசங்கள்.	2 விமானங்கள்	நஷ்டமில்லை. சொற்பச்சேதம். 9 பேர்களுக்குக் காயம்.
	மர்ஸாமாத்ரூ (Mersa Matruh), ஏடன் (Aden).	......	......
	ஹைபா (Haifa) ...		ஒரு மசூதியும், சவ அறையும் தாக்கப் பட்டன; 32 அராபியர்கள் உயிர் இழந்தனர்.
22—9—40 (ஞாயிற்றுக்கிழமை).			
	பகலில்.—லண்டன் (London) பிரதேசம், கிழக்கு ஆங்கிலியா (East Anglia).	......	சேதமில்லை.
	இரவில்.—லண்டன் (London), பட்டணங்கள்—தென்கிழக்கு, வடமேற்கு இங்கிலாந்து.	11 விமானங்கள்.	சிலருக்குக்காயம், அதில் சிலர் இறந்தனர். 11 விமானங்கள் 7 விமானிகள் பத்திரம்.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	பிரிடிஷாரின் நஷ்டமும், அவற்றின் விளைவுகளும்.
22—9—40. (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி.			
	மால்டா (Malta), அலக்ஸாண்டிரியா (Alexandria), ஹைபா (Haifa).	......	சில வீடுகள் இடிந்து போயின ; 1 மனிதன் மாண்டான்.
23—9—40. (திங்கட்கிழமை.)			
	காலையில்.—கெண்ட் (Kent), எஸ்ஸெக்ஸ் (Essex) கடற்கரை, ஈஸ்ட்போர்ன் (East bourne).	......	குண்டுகள் விழவில்லை. சிலருக்குக் காயம்.
	பிற்பகலிலும், மாலையிலும்.—லண்டன் (London), கெண்ட் (Kent) கடற்கரை.	......	குண்டுகள் போடப்படவில்லை.
	இரவில்.—லண்டன் (London) பிரதேசம், வடமேற்கு இங்கிலாந்தில் சில பாகங்கள்.	15 விமானங்கள்.	சில வீடுகள் இடிந்து போயின. 11 விமானங்கள் ; 7 விமானிகள் உயிர் தப்பினர்.
	மால்டா (Malta).		வீடுகளுக்குச் சேதம்.

அனுபந்தம் I.

? ? ?

சில வினைக்களும், விடைகளும்.

1. அமெரிக்கா என்ன செய்துகொண்டிருக்கிறது?

நாளது அக்டோபர்மீ 12ஔ மாலை 6.30-மணிக்கு நடக்கப்போகும் உபந்நியாஸத்தை வந்து கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.

2. பிரதியிழைத்தல் சரியான கோள்கையா?

இல்லை. பிரிடிஷ் விமானிகளின் குறியின் சாமர்த்தியத்தையும். குறிப்புகளாகக் கொள்ளக்கூடிய மர்மஸ்தானங்கள் பல இருக்கும் விஷயத்தையும் நோக்குங்கால், தீங்குக்குத்தீங்குசெய்தல் சரியல்ல.

லண்டன் நகரத்தை மத்தியாகவைத்து, கிழக்கே 600-மைல் நீளத்திற்கு மறு கால்வைத்து ஒரு பாதிவட்டம் போட்டால் தெற்கே டியூரின், மிலான் என்ற இரு இதாலிய நகரங்களும், வட போலந்தில் உள்ள போலிட்ஸ் என்னும் நகரமும், ஸ்காண்டிநேவியா தேசம் பூராவும் உட்படுகிறது, மேற்கண்ட 600-மைல் தூரமும் நம் வெடிகுண்டு விமானங்களின் வீச்சுக் குட்பட்டிருக்கிறது.

யுத்த அறிக்கை நிலயத்திற்கு வெளியே இருக்கும், தேசபடத்தை உற்றுநோக்குங்கள். உங்கள் மனக்கண்ணுக்கு எல்லா விவரங்களும் தெளிவாய் விளங்கும்.

3. இங்கிலீஷ்காரர் அமெரிக்கர்களிடம் வாங்கியிருக்கிற 50 நாசகாரிகளும் பிறவி உரிமைகளைக் கொடுத்து வாங்கிய பானைக்கூழ்தானா?

பானைக்கூழுக்காக பிறப்புரிமைகளை இழக்கவில்லை. அவைகள் பானைக் கூழ்போல மலிவானதல்ல.

(i) அமெரிக்காவிற்கும், பிரிடனுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தால் ஸாம்ராஜ்யத்தில் எதையும் கொடுத்துவிடவில்லை. சில பிரதேசங்களைக் குத்தகைக்கு விட்டதால் அவைகள் கிரயமாகாது. அந்தப் பிரதேசங்களிலுள்ள ஆதிபத்யமும் மாறினதாக ஆகாது.

(ii) மேற்படி குத்தகைகளும் வெகு ஜரூராகவும் ஆர்வத்துடனும் இரு திறப்பிலுள்ள பொதுஜனங்களால் வரவேற்கப்பட்டிருக்கின்றன. மேற்படி ஏற்பாட்டைக் கண்டிக்கிறவர்கள் யதேச்சாதிகாரிகள் தான். ஏனெனில் அமெரிக்க வல்லரசானது தங்களுக்குக் குறுக்கே நிற்பதால் அவர்கள் மிகவும் அருவருக்கிறார்கள். யதேச்சாதிகாரிகளும் மேற்படி வல்லரசை தங்களுடைய சத்துருவாக கொஞ்சம் கொஞ்சமாக மாற்றிக்கொண்டுவருகிறார்கள்.

(iii) மேற்கண்ட குத்தகை ஏற்பாட்டின் கொள்கை ஜப்பானியர்களுக்கும் பிடிக்கவில்லை. சிங்கப்பூரின் எதிர்கால நிலையைப்பற்றி அவர் நேற்றும், இன்றும் (ஸெப்டம்பர் மீ 23, 24வ களில்) பத்திரிகைகளில் சொல்லியிருப்பதைப் பார்க்க.

(iv) அமெரிக்காவில் பிரஸிடெண்டு ரூஸ்வெல்டு காங்கிரஸைக் கேட்காமலே மேற்படி ஒப்பந்தத்தில் கையெழுத்துச் செய்தார். தேர்தல் தருவாயில் அவ்வாறு அவர் செய்திருப்பதைப் பார்க்க, பிரிடனைப் பொது ஜனங்கள் ஆதரிக்கிறார்கள் என்று அவர் நிச்சயமாகத் தெரிந்துகொண்டிருக்கிறார் என்று விளங்கும்.

4. படையெடுப்புப் பூச்சாண்டி மறைந்துவிட்டதா?

இல்லை. ஹிட்லர் இன்னும் படையெடுக்க முயற்சிப்பார்.

ஏனெனில் (a) ஜெர்மனியில் தன்னுடைய மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காகவும்,

(b) மூக்குப்போன செவியாக விழுந்தாவது யுத்தத்தை நீளவிடாமல் தடுப்பதற்காகவும்தான்.

குறிப்பு:—(a) ஏராளமான கப்பற்படைகளையும், ராணுவப்படைகளையும் எகிப்து பிரதேசங்களுக்கு பிரிடன் அனுப்பியிருக்கிறது.

(b) ஏதாவது சேதம் நேர்ந்தால் அதற்கு ஈடுசெய்ய பிரிடிஷார் அமைதியாகச் செய்துவரும் இன்ஷ்யூரன்ஸ் ஏற்பாடுகள்.

(c) முன்னேறி யுத்தம் செய்வதற்குவேண்டிய யுத்த தளவாடங்கள் செய்வதை நிறுத்தாமல் இருப்பதற்காக, விமானப் படையெடுப்பு எச்சரிக்கை ஏற்பாட்டை தைரியமாக பிரிடன் மாறுதல் செய்திருப்பது.

(d) விமானங்கள், விமானிகள் இவர்களின் உயர்வு தொடர்ந்து பிரிடனுடையதாகவேயிருந்துவருகிறது. விமானங்களில் 3:1-க்கு மேலும்; விமானிகளில் 6:1-க்கு மேலும் தாரதம்யம் இருந்துவருகிறது. ஒரு ஜெர்மன் விமானமும்

அதிலுள்ள எல்லா விமானிகளும் நாசமடைந்தால், பிரிடிஷ் விமானி ஒருவன் உயிரிழக்கிறான். பிரிடிஷ் விமானிகள் தங்கள் விமானங்களைக் காப்பாற்றவேணும் என்பதற்காக அதிக சிரமப்படவேண்டியதில்லை என்றும், உத்தரவிடப் பட்டிருக்கிறார்கள். ஏனெனில், ஏராளமாக விமானங்கள் இருக்கின்றன.

5. எது எதை முற்றுகைபோடுகிறது?

இந்த இதழில் இங்கிலாந்து ஜெர்மனியை முற்றுகை போடுகிறதென்ற விஷயம் விவஹரிக்கப்படுகிறது. அந்த உபந்நியாஸத்தை வாசிக்கவும். அதில்கண்ட விஷயங்கள்தான் நடப்பு. இல்லாவிடில் ஜெர்மனி (சில புரியாத அமெரிக்கர்களும்) இவ்வளவு கூப்பாடு போடுவானேன்? ஒரு கண்டம் பூராவும் இரக்கமின்றி பட்டினி போடப்படுகிறதென்று சப்தம் செய்வானேன்? ஆனால், ஜெர்மனி திருப்பி வாசிப்பதைக் கேளுங்கள். ஜெர்மன் பிரசாரம் சொல்வதாவது:—

(*a*) பிரிடன் முற்றுகை போடப்படுகிறது.

(*b*) பிரிடனை முற்றுகை போடப்போகிறோம்.

(c) எப்படிக்கிருந்தாலும் நாட்டிலிருந்து சாக்குகள் போக்குவரத்துச் செய்ய முடியாமலிருக்கிறது.

ஆகையால், பின்வரும் விஷயங்களை கவனியுங்கள்.

(i) ரொனல்டு கிராஸ் என்ற கப்பல் ஏற்ற மந்திரி "வருஷ ஆராய்ச்சி" செய்யும்போது சொல்லுகிறார்: புதிய கப்பல்கள் செய்தும், கிரயம் வாங்கியும், பிடித்ததிலிருந்தும், பிரிடிஷ் கொடியின்கீழ் உள்ள கப்பல் ஸாதனங்கள் குறைவற்று இருக்கின்றன.

(ii) அரை வருஷ வியாபார விஷயமாய் ஸர்க்கார் விடுத்திருக்கும் ரிபோர்ட்டிலிருந்து, அதே அரை வருஷ காலத்திற்கு 1939-ம் வருஷத்தில் இருந்ததைக்காட்டிலும், தற்பொழுது 72,689,000 பவுன் ஜாஸ்தியாக இறக்குமதி ஆகியிருப்பதாகவும், 25,570,000 பவுன் ஜாஸ்தியாக ஏற்றுமதி ஆகியிருப்பதாகவும் தெரிகிறது.

(iii) மத்தியதரைக்கடல் பிரயாண விஷயமாய் இன்ஷ்யூரன்ஸ் சார்ஜுகளும் 15-பவுனிலிருந்து, $7\frac{1}{2}$-பவுனாக குறைக்கப்பட்டிருக்கிறது.

அனுபந்தம் II.

ஜெர்மனி, பத்திரிகைகளுக்குப் போடும் வாய்ப் பூட்டு

பத்திரிகைகளை அடக்கும் முறைகள்.

பிடித்த நாடுகளில் அடக்குமுறை ஒரு விதம்.

நடு நிலை நாடுகளில் மற்றொரு விதம்.

உள்ளதைச் சொல்லும் பத்திரிகைகளின் கதி.

பத்திரிகைகள் சரிவர நடைபெறுததால், ஜெர்மனி பிடித்துக்கொண்ட நாடுகளிலும், அதைக்கண்டு அஞ்சும் நாடுகளிலும் நடக்கும் காரியங்களைப் பற்றிய செய்திகள் உள்ளபடி வெளிவரவில்லை.

ஆனால், ஜெர்மனியின் தூண்டுதல் பேரில் பொய்ச் செய்திகள் பலவாறாக, நாள் தவறாமல், வெளிவருகின்றன. இவைகளை நம்பாதிருப்பதே பெரிய காரியம்.

பிடித்த நாடுகளில் ஒருவிதமாயும், நடுநிலை நாடுகளில் மற்றொரு விதமாயும் அடக்குமுறை அனுசரிக்கப் படுகிறது.

பிடித்த நாடுகள் :—இங்கே, ஏற்கனவே நடந்து வரும் பிரபல பத்திரிகைகளை நிறுத்திவிடுவது கிடையாது. ஜெர்மனி எழுதிக் கொடுத்தபடி அபிப்பிராயங்களைப் போடச்சொல்லி இப்பத்திரிகைகள் கட்டாயப்படுத்தப்படுகின்றன. கௌரவம் வாய்ந்த பத்திராதிபர்கள் இதற்குச் சம்மதிப்பதில்லை. இவர்கள், ஜெர்மனிக்கு விரோதமாக எழுதாவிட்டாலும், ஸ்தோத்திரம் செய்யாது, சற்று விரோதமாகவும் எழுதக்கூடும். இதை சாதாரண பரிசோதகர்கள் (Censors) கண்டு பிடித்து, ராணுவ இலாகா பரிசோதகர்களுக்கு புகார் செய்து, பத்திராதிபர்கள் கண்டிக்கப் படுவார்கள். மேலும், மீறினால், பத்திராதிபர்கள் கைது செய்யப்பட்டு பத்திரிகைகளும் நிறுத்தப்படும்.

ஹாலந்து :—இங்கே, ஆரம்பத்தில் பத்திரிகைகளுக்கு சோதனை இல்லாதிருந்தது. ஆனால், அரசாங்கம் மாறி விட்டதற்குத் தக்கபடி அபிப்பிராயங்களை மாற்றிக்கொள்ள எச்சரிக்கப்பட்டன.

பிறகு, எச்சரிக்கைப்படி சில பத்திரிகைகள் தங்கள் அபிப்பிராயங்களை மாற்றிக்கொள்ளாமல் இருந்ததால், 'ஏற்கனவே செய்த நல்லவேலைகளை கவனித்து இந்தப்பத்திரிகைகள் இது வரையில் மன்னிக்கப்பட்டன; மறுமுறையும் எச்சரிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. தாமதிக்கக்கூடிய சமயம் இதுவல்ல; சொன்னபடி உடனே அபிப்பிராயங்களை மாற்றிக் கொள்ளாவிட்டால் பத்திரிகைகளின் வாழ்நாள் குறுகிவிடுமென்று' பயமுறுத்தப்பட்டன.

உத்தரவுப்படி பத்திரிகைகளும் அபிப்பிராயங்களை துரிதமாக மாற்றிக் கொண்டன. அதற்குள்ளாக, ஜெர்மனிக்கு விரோதமாயும், நேயக்கக்ஷிக்குச் சாதகமாகவும் எழுதுவதாக மூன்று பத்திரிகைகள் நிறுத்தப்பட்டன.

இவ்விதம் நிறுத்தப்பட்ட பத்திரிகைகளில் ஸ்டாண்டேர்ட் (Standard) என்பது ஒன்று. இதன் பதிப்பாசிரியர், அநேக வருஷங்களாக ஹாலந்தில் பிரதம மந்திரியாய் இருந்த டாக்டர் கோலின் (Dr. Colijn) என்பவர். நேயக்கக்ஷித்துருப்புகள் ஹாலந்து, பெல்ஜியம் வழியாக ஜெர்மனிக்குள் நுழையப்பார்த்ததாகப் பொய் தஸ்தாவேஜு (German White Book) ஒன்றை ஜெர்மனி தயாரித்தது. இதை நம்பவில்லை யென்று சொன்னதுதான் டாக்டர் கோலின் செய்த குற்றம்.

டென்மார்க் :-இங்கும், ஜெர்மனியைப்பற்றியோ டென்மார்க்கைப்பற்றியோ ஜெர்மனி வெளிவிடும் அறிக்கைகளை மறுக்கக்கூடாதென்றும், மறுத்தால் கடுமையான தண்டனை யென்றும் பத்திரிகைகள் எச்சரிக்கப்பட்டன. ஜெர்மனி கொடுக்கும் செய்திகளைப் போடவேண்டும், ஆனால் ஜெர்மனி சொன்னதாக வெளிவரக்கூடாதென்றும் சொல்லப்பட்டன. பரிசோதகர்களால் கண்டிக்கப்பட்டன. ஆனால் சமாசாரங்கள் நம்பக்கூடியவை யல்லவென்று பத்திரிகைகள் வாங்குவாரற்றுப் போயின. வெளியூர் பத்திரிகைகள் வியாபாரம் வலுத்தது.

நார்வே :—இங்கேயும், ஜெர்மன் சமாசார இலாகாச் செய்திகளைத்தான் பிரசுரிக்கவேண்டும் என்றும், ஜெர்மனிக்கு விரோத தேச மந்திரிகள், சேனாபதிகள், அரசர்கள், ராஜ பந்துக்கள் பேசும் பேச்சுகளைப் பிரசுரம் செய்யக்கூடாதென்றும், ஜெர்மன் துருப்புகளுக்கும், நார்வே மக்களுக்கும், மனஸ்தாபம் வரக்கூடிய எதையும் எழுதக்கூடாதென்றும், வியக்தமாக, பத்திரிகைகளுக்கு உத்தரவு சமர்ப்பிக்கப்பட்டது.

பிரான்ஸ் :—பிரான்ஸ் முழுவதும் பிடிபட்டு விட்டாலும், இதில் ஒரு பாகம் ஜெர்மனியின் நேர் ஆக்ஷியிலும், மற்றொருபாகம் மேற் பார்வையிலும் இருக்கிறது. இவ்விரண்டு பாகங்களில் பத்திரிகைகள் வெவ்வேறு விதமாக அடக்கப்பட்டு வருகின்றன.

நேர் ஆக்ஷி பாகம் :—பாரிஸ் பிடிபட்டவுடனேயே சில கௌரவ பத்திரிகைகள் நின்றுபோயின. மாடின், பாரி :ஸாயர், டேர்னியர், நோவயே டி பாரி பத்திரிகைகளை ஜெர்மனி தனதாக்கிக்கொண்டது. மாடின் பத்திரிகை யூதர்களையும், பிரிடனையும் தூஷிக்கிறது. பிரான்ஸிலேயே இல்லாத சிலர்கள் எழுதியதாக கட்டுரைகள் வெளிவருகின்றன. இவர்கள் பிரான்ஸில் வசிக்கவில்லை யென்பது உள்ளூர்க்காரர்களுக்குத்தான் தெரியும். பொதுவாக, இப்பொழுது பிரான்ஸிலிருந்துவரும் செய்தி யெல்லாம் ஜெர்மன் செய்தியென்றே வைத்துக்கொள்ள வேண்டும்.

நேர் ஆக்ஷியில்லாத பாகம் :—இங்கு பேருக்குச் சற்று ஸ்வதந்திரமுண்டு. ஆனால் பிரான்ஸின் இருபாகங்களிலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் ஒன்றுக்கு ஒன்று முரணாய் எழுதிக்கொண்டு, அவைகளுக்குள் சண்டை வந்து விடுகிறது. மாடின் போன்ற ஜெர்மனிக்குச் சொந்த பத்திரிகைகள், மற்றபத்திரிகைகள் இங்கிலாந்து அனுப்பும் செய்திகளைப் போடுவதாக தூஷித்து, பீதேன் (Petain) அரசாங்கத்தைத்தாழ்த்தி, ஜெர்மன் ஆக்ஷி, சாமார்த்தியமென்று உயர்த்திப் பேசுகின்றன. வேண்டாத செய்திகள் சோதனை உத்தியோகஸ்தர்களால் தடுக்கப்படுகின்றன.

ஜெர்மனியின் அடக்குமுறை சமயத்துக்குத்தக்கபடி மாறும். எவ்விதமாகவாவது, மனதைக்கலைத்து, வம்பு செய்யவேண்டியதுதான் ஜெர்மனியின் பொதுவான நோக்கம்.

நடு-நிலை-நாடுகள் :— நடு-நிலை-நாடுகளில் வெவ்வேறுவிதமாக பத்திரிகைகள் கையாளப்படுகின்றன. இங்கே சில பத்திரிகைகள் ஜெர்மனிக்குச் சொந்தமானவை, சில ஜெர்மன் பண ஆதரவு பெற்றவை. இவைகளை வாங்குபவர்கள் அதிகமாக இராது. இருந்த போதிலும் இவைகளில் ஜெர்மன் அபிப்பிராயங்கள் உள்ளூர் அபிப்பிராயங்களாக எழுதப்படும். பிறருக்கும் இவை உள்ளூரார் நோக்கங்களாக எடுத்துக்காட்டப்படும். இது ஏற்கனவே பிஸ்மார்க் (Bismark) எடுத்த தந்திரம். இப்பொழுது, அதிகப்பணச்செலவு செய்து, ஹிட்லரால் பலப்படுத்தப் பட்டிருக்கிறது. இந்தப்பத்திரிகைகள் நேயக்கக்ஷிக்கு வேண்டியவர்கள் போலவும், உண்மையைச் சொல்லுமிடத்து, நேயக்கக்ஷிசெய்வது சரியல்லவென்றும் நேயக்கக்ஷி தோற்றுவரும் சமயம் வந்து விட்டதால் அனுதாபத்தைக்காட்டுவதாகவும், பலவாறாக, தர்மபுத்திரரே அவதரித்து நியாயத்தைச் சொல்லுவது போல் நடிக்கும்.

ஸ்வீடன், ஸ்விட்ஸர்லாந்து.— இங்குள்ள அரசாங்கங்கள் ஹிட்லர் பிரசாரத்தை நம்புவதாகப் பாசாங்கு செய்கின்றன. ஆனால் இங்குள்ள பத்திரிகைகள், ஹிட்லர் அட்டூழியங்களை மறைக்காது, தடஸ்தமாய், தைர்யமாய் எழுதுகின்றன.

பொதுவாக, மயக்கி, ஏய்த்து விடுவதுதான் ஜெர்மனியின் நோக்கம். பொய்யென்று ரூபித்த பிறகும்கூட, பொய்யை நிறுத்தமாட்டார்கள். உதாரணமாக, அதீனியா (Athenia)-க் கப்பலை மிஸ்டர் சர்ச்சில் உடைக்கச் சொல்லி உத்தரவிட்டதாகவும், ஹிட்லரைக் கொல்ல மிஸ்டர் சேம்பர்லின் சூழ்ச்சி செய்ததாகவும் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஆயிரம் தடவை பொய்யென்று ரூபித்தாய் விட்டது. பொய்யைவிடாது சொன்னால் எவரும் நம்பிவிடுவார்களென்பது இவர்கள் நோக்கம். இதே மாதிரியாக பிரிடனுக்கு ஏற்படுகிற விமான, கப்பல் நஷ்டங்களை, பெருக்கி, கண்டபடி உயர்த்திச் சொல்லுகிறார்கள். முடிவில் பிரிடன் கொடுக்கும் கணக்கை நம்பாது செய்து விடுவதுதான் இதின் உத்தேசம். ஆகையால், ஜெர்மனியின் சம்பந்த மிருப்பதாக சந்தேகப்படக்கூடிய ஒரு செய்தியையும், நம்பக்கூடாது. ஆனால் இவர்கள் என் பொய் சொல்லுகிறார்களென்று வேண்டுமானால் ஆராய்ச்சி செய்யலாம்.

அனுபந்தம் III.

ஹிட்லருக்கு அகம்பாவம் குறைகிறது.

கத்தி—விழுங்கல்.

மாரிகாலத்தில் கஷ்டப்படுபவர்கள் உதவிக்காக ஜெர்மனியில், வருஷா வருஷம் திரவியம், திரட்டுவதுண்டு. அதே மாதிரியாக இந்த வருஷம் இந்த இயக்கத்தை ஹிட்லர், பெர்லினில், சென்ற புதன்கிழமை துவக்கிவைத்தார்.

அப்பொழுது அவர் செய்த பிரசங்கம் வழக்கம்போல் படாடோபமாயில்லை. அதிலிருந்து தேசத்தில் மாரிகாலப்பஞ்சம் குறைவென்று நினைக்கக்கூடாது. வாஸ்தவத்தில் பிரிடன் போட்டிருக்கும் முற்றுகையால் பஞ்சம் கடுமையாய்த்தான் இருக்கப்போகிறது. ஆனால் ஹிட்லருக்கு வெறி குறைந்திருப்பதற்குக் காரணம் வேறு. பேசுகையில் வழக்கம்போல் ஹிட்லர் பிரிடனைப் பயமுறுத்தினார். ஆனாலும், "பிரிடன் தீவென்பதெல்லாம் போச்சு; அதைத் தாண்டிவிடுவோம்" என்று ஏற்கனவே சொன்ன இறுமாப்பு வார்த்தைகள்போய் இப்பொழுது 'இங்கிலாந்து தீவாயிருப்பதினால் அல்லவோ தப்பிவிட்டது' என்று மாற்றிச்சொன்னார். பிரிடிஷ் துருப்புகள் சிதறாது டன்கர்க்கிலிருந்து மீட்கப்பட்டதைப்பற்றி இதுவரையில் பிரஸ்தாபம் கூடச்செய்யாத ஹிட்லர், இந்தப் பிரசங்கத்தில் "டன்கர்க்கிலிருந்து வேகமாய் ஓடியல்லவோ தப்பிவிட்டார்கள்" என்று அவர் அறியாது, எரிச்சலோடு ஸ்தோத்திரம் செய்யலாயிற்று. "சந்திரனைக்கூட முற்றுகைபோட்டுவிடுவேன்", என்று வாய் வார்த்தையாகச்சொல்லலாம். அதுபோல இது வரையில், பிரிடனை முற்றுகைபோடுவதாகச் சொல்லிக்கொண்டிருந்த ஹிட்லர் இப்பொழுது, தன் தேசம் பிரிடனால் முற்றுகை போடப்பட்டிருப்பதை ஒப்புக்கொண்டு, 'இது என்ன கேவலம்! ஒரு சிறு தேசம் பிரிடன் ஐரோப்பாகண்டமுழுவதும் முற்றுகை போடுகிறது. இதை விட்டுவிடக்கூடாது" என்று இந்தப் பிரசங்கத்தில் சொன்னார்.

யார் ரத்தம் உறைகிறது?

மூன்று மாதங்களாக பிரிடிஷ் விமானங்கள் ஜெர்மனியையும், அது பிடித்த நாடுகளையும் எதிர்த்து வருகின்றன. ஆரம்பத்தில் ஜெர்மன் மந்திரிகளான கோரிங்கும் (Goering)ம், கீபல்ஸு (Goebbles)ம் ஜெர்மனிக்குள் எதிரி விமானங்கள் வரவே முடியாதென்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். பிறகு பிரிடிஷ் எதிர்ப்பைச் சிறிதென்று அலக்ஷியம் செய்து பாசாங்கு செய்தார்கள். இந்தப் பிரசங்கத்தில் ஹிட்லர் ஸதஸில் ஜெர்மானியர்கள் இருந்ததால், இதைப்பற்றி சொல்லிக்கொள்ளும் அவசியம் ஏற்பட்டுவிட்டது. "இத்திருடர்கள் இரவில் விமானங்களில் வந்து செய்யும் விஷமத்தை நிறுத்திவிடுவோம்" என்று சொன்னார். இவ்விதமாக பிரிடிஷ்—விமானப்படையெடுப்பு சேதத்தை ஒருவாறு ஒப்புக் கொள்ளவேண்டியதாயிற்று.

'மூன்று மாதங்களாகப் பொறுத்தேன்; இனிப்பொறுக்கமுடியாது; இனி பழிக்குப்பழி வாங்கப்போகிறேன்' என்று சொல்லிக்கொண்டார். இது பொய். பிரிடிஷ் விமானங்கள் ஜெர்மனியை எதிர்க்க ஆரம்பிப்பதற்கு முன்பாகவே பிரிடன் மேல் படையெடுத்து அதை த்வம்ஸம் செய்யப்போவதாக, கர்ப்பம் கலங்கும்படி ஹிட்லர் சொல்லிவந்தார். சொன்னதோடு நிற்காமல் தடவைக்கு ஆயிர விமானங்களாக வந்து எதிர்த்தும் பார்த்துவிட்டார். ஒன்றும் முடியவில்லை. இதுதான் இப்பொழுது ஹிட்லர் தணிந்து பேசுவதற்குக் காரணம். மேலும், இனியும் ஹிட்லர் பிரிடனை விமானங்களைக்கொண்டு எதிர்க்கலாம். ஏற்கனவே வந்த விமானங்களைவிட அதிக விமானங்களும் வரலாம்; ஆனால் மறுபடியும் இந்த விமானங்கள், முன்போல முறிபட்டு, சுடப்பட்டு, நிலத்திலும், கடலிலும் விழுந்து

அழியத்தான் போகின்றன. பிரிடனே ஒரு கோட்டையாக பலப்படுத்தப்பட்டு இருக்கிறது. இதைப் பிடித்துவிடுவதாக வீர்யம் பேசின துடுக்கு வார்த்தைகள் எல்லாம் வீணய்ப்போயின. ஹிட்லருக்கு மானமும், பெயரும் போய்விட்டன. இனித் திரும்பப்போவதில்லை.

பிரிடனைக் காப்பாற்றி நிற்கும் விமானிகளைப்பற்றி மிஸ்டர் சர்ச்சில், 'இவர்கள் வீரர்கள், இவர்களால் உலகமே காப்பாற்றப்படுகிறது' என்று சொன்ன வார்த்தைகள் உண்மையாகும். ஏனென்ருல், இவர்களால் பிரிடனில் இருப்பவர்கள் காப்பாற்றப்படுவதோடு, வெகு தூரத்தில் தென் பஸிபிக் சமுத்திரத்திலிருக்கும் பவழத்திவுகளிலும், உஷ்ணம் மிகுந்த ஆபிரிக்கக் காடுகளிலும், அமைதியற்ற தூரக்கிழ்-நாடுகளிலும், அமெரிக்கா கண்டத்து நகரங்களிலும், பிரிடன் தனக்கு வந்த கொடிய ஆபத்தை எவ்விதம் எதிர்க்குமோவென்று பயந்துகொண்டிருந்தவர்கள் எல்லோரும், இப்பொழுது தைரியமாய் இருக்கிருர்கள்.

கால நிலை மாறிவிட்டது. ஜயம் ஹிட்லரை விட்டு விலகி நமக்கு வர ஆரம்பித்துவிட்டது. இப்பொழுதுதான் எதிரிகளும் இதை அறிந்து ஏக்கப்படுகிருர்கள்.

அனுபந்தம் IV.

கருமிகளைப்பற்றிய தமாஷ்

இந்தியாவின் செல்வநிலை.

இந்தியாவின் செல்வநிலை வெகு திருப்திகரமாயிருக்கிறது. ஆனல் பிரிடன், ஜெர்மனியைவிட, இந்தியா வெகு குறைத்தே யுத்தத்துக்குச் செலவு செய்கிறது. ஜெர்மனியில் மாதத்துக்கு யுத்தச் செலவு 2,500 லக்ஷம் பவுன், பிரிடனில் 1,670 லக்ஷம் பவுன், இந்தியாவில் 33 லக்ஷம் பவுன். பிரிடனும், ஜெர்மனியும், செல்வம் பெருத்த தேசங்களானதால், அதிகச் செலவு செய்யலாம் என்று சொல்லலாம். இவைகளுக்கு வருமானம் அதிகமென்பது உண்மையே. ஆனல் வருவாயில் பெரும்பாகம் இவைகள் செலவு செய்கின்றன. இந்திய மத்திய கவர்ன்மெண்டுக்குச் செலவு $99\frac{1}{2}$ கோடி ரூபாய்தான்; தேச வருமானமோ 2,500 கோடியிலிருந்து 3,000 கோடி ரூபாய்; அதாவது, மொத்த வருமானத்தில் 100-ல் 4 பங்குதான் மத்திய கவர்ன்மெண்டு செலவுசெய்கிறது.

அனுபந்தம் V.

ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

3—9—40.

'வியென்னு' உடன்படிக்கைப்படி ருமேனியா தன்னுடைய பிரஜை களில் 15 லக்ஷம் பெயர்களை ஹங்கேரிக்குக் கொடுத்துவிட்டது. ஹிட்லரை திருப்திசெய்ய ருமேனியா இந்தத் தியாகத்தைச் செய்தது. ஹங்கேரிக்கும் இதில் வெகுதிருப்தியாம். இந்த உடன்படிக்கை தர்ம நியாயமாம். ஆனல் இது எவ்விதம் நியாயமென்று தெரியவில்லை. ஜெர்மனி செய்த இந்த மத்தியஸ்தத்தில் ஒரு கக்ஷிக்குக் கேட்டதெல்லாம் கொடுக்கப்பட்டிருக் கிறது; மற்றொரு கக்ஷிக்கு வாயில் மண்போடப்பட்டிருக்கிறது.

4—9—40.

ஜெர்மனியைத் திருப்திசெய்ய ஒருவராலும் முடியாது. பிரிடனுக்கு மண்ணாசை அதிகமென்று சொல்லிக்கொண்டிருக்கிறது. இப்பொழுது, பிரிடன், அமெரிக்காவுக்கு சில இடங்களை விட்டுக்கொடுத்திருக்கிறது. இவ்விதம் கொடுத்தாலும் குற்றம் கண்டுபிடிக்கிறது. இந்த இடங்களை விட்டுக்கொடுத்ததால் பிரிடனுக்கு கௌரவமும், மதிப்பும் போய்விட்டதாகச் சொல்லுகிறது. பிரிடன் பிடித்துக்கொண்ட ஜெர்மன் குடியேற்ற நாடுகளை திருப்பிக்கொடுக்க ஜெர்மனி கேட்கிறதே? அவ்விதம் கொடுப்பதும் பிரிடனுக்குக் கேவலமில்லையா? உண்மையில், இப்பொழுது பிரிடன் அமெரிக்காவுக்கு ஒன்றையும் கொடுத்துவிடவில்லை. சில இடங்கள் குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றன. இதேமாதிரி, பிரிடனிலேயே அநேக அயலூரார்களுக்குக் குத்தகைக்கு நிலங்கள் விடப்பட்டிருக்கின்றன. இதிலிருந்து பிரிடனையே கொடுத்து விட்டதாகச் சொல்லமுடியுமா?

குழந்தைகளை ஏற்றிப்போன கப்பலை உடைத்துவிட்ட பேச்சு இன்னும் நிற்கவில்லை. இந்தக் கப்பலை ஜெர்மனி உடைக்கவில்லையென்று சொன்ன பேச்சுமாறி, இப்பொழுது இந்த சம்பவத்தை ஜெர்மனியின் முற்றுகைக்கு திருஷ்டாந்தமாக எடுத்துக்காட்டப்படுகிறது. ஜெர்மனியின் யுத்தக்கப்பல் கள் பிரிடனைச்சுற்றி சுவர்வைத்தாற்போல் முற்றுகை போட்டுக்கொண்டிருக் கின்றனவாம்; ஈ, எறும்புகூட நுழையமுடியாதாம்; 300 பணக்காரவீட்டுக் குழந்தைகள் மட்டும் எப்படித் தப்பியோடமுடியுமென்று ஜெர்மனி இப் பொழுது கேட்கிறது.

'சிசுரக்ஷணமே முக்கியமாகக்கொண்ட ஜெர்மன் கவர்ன்மெண்டு குழந்தைகளை ஏற்றிப்போகும் கப்பலைக் கவிழ்க்குமா?' என்று சென்ற வாரம் கேள்விகேட்ட ஜெர்மனி இப்பொழுது தப்பிலித்தனமாய், 'ஏன் பணக்காரக் குழந்தைகளை விட்டுவிடவேண்டும்' என்கிறது! இனி சக்கரவர்த்தியின் குடும்பமும், பிரிடிஷ் மந்திரிகளும் கனடா (Canada)வுக்கு ஓடிவிட்டதாகக்கூடச் சொல்லப்பார்க்கும்.

5—9—40.

சென்ற வாரம் ஹிட்லர் செய்த பிரசங்கம், ஜெர்மனியில் முழுபாகம் பிரசுரிக்கப்பட்டது. ஆனால் இந்தியாவில் பிரசங்கத்தின் சிலபாகங்கள் மட்டும்தான் பிரசுரிக்கப்பட்டன. இதற்குக்காரணம், இந்தியாவுக்கு அதில் சில பாகங்கள் தெரியக்கூடாதென்பதுதான். முதலாவதாக, பிரிடன்-விமானப் படையெடுப்பால் ஜெர்மனி படும் கஷ்டத்தைப்பற்றி பிரஸ்தாபம் செய்யப்பட்டது. இப்பொழுதுதான், தனக்கு இவ்விதம் ஏற்பட்டிருக்கும் விபத்தை ஜெர்மனி வெளிவிடுகிறது. இரண்டாவதாக 'பிரிடன், தீவாய் இருப்பதால், ஜெர்மன் எதிர்ப்புக்குத் தப்பிவிட்டது' என்று ஹிட்லர் சொன்னவார்த்தைகள் இந்தியாவுக்கு ஒலிபரப்பப்படவில்லை. சானல் (Channel) துறைமுகங்களைப் பிடித்துக்கொண்டபிறகு பிரிடனைப்பிடிப்பது சுலபமென்றும், பிரிடன் தீவென்று நிர்ப்பயமாயிருந்த காலம் போய் விட்டது என்றும் ஹிட்லர் சொல்லிக்கொண்டிருந்தார். இப்பொழுது இதற்குமாறாக 'பிரிடன் தீவு; ஆகையால் அதைப்பிடிக்கமுடியாது' என்று சொல்லுகிறார். தோல்வியிலிருந்து அனுபவம் வந்துவிட்டது. 'பிரிடன் தீவுதான்' என்ற மறந்துபோன பூகோளசாஸ்திரப்பாடத்தை ஹிட்லர் திருப்பி வாசிக்க நேர்ந்திருக்கிறது.

மூன்றாவதாக, 'ஒரு தேசம் (பிரிடன்) ஐரோப்பியகண்டம் முழுவதையும் முற்றுகைபோடுவது நமக்குக் கேவலமாயிருக்கிறது' என்று ஹிட்லர் சொல்லிக்கொண்டார். இந்தப் பேச்சும் இந்தியாவுக்கு வரவில்லை. ஏனென்றால், இதுவரையில் ஜெர்மனியல்லவோ பிரிடனை முற்றுகை போடுவதாகச் சொல்லிக்கொண்டிருந்தது. இந்த வார்த்தை பொய்யாய்ப்போய், இப்பொழுது ஐரோப்பா முழுவதையும் பிரிடன் முற்றுகை போட்டிருக்கும் சமாசாரம் ஹிட்லரே ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கிறது.

6—9—40.

பிடித்துக்கொண்ட ஹாலந்தை ஜெர்மானியர் கொள்ளையடித்து ஹிம்ஸை செய்கிறார்கள். யாராவது புகார் செய்தால், அவர்களை அதிகப்பிரஸங்கிகளென்றும், கலகக்காரர்களென்றும், துரோகிகளென்றும் குற்றம் சாட்டி தண்டிக்கிறார்கள். இதேமாதிரியாகப் பிடித்த பாக்கி இடங்களிலும் செய்து வருகிறார்கள்; நடப்பு இப்படியிருக்க, இன்று செய்த ஒலிபரப்பில்,

ஜெர்மனி, நார்வே, பெல்ஜியம், ஹாலந்து, டென்மார்க், பிரான்ஸெல்லாம் ஒத்து வாழ்வதாகச் சொல்லப்படுகிறது. போலந்தையும், ஸெகோ-ஸ்லவோகியாவையும் ஏன் சேர்க்கவில்லை? இவைகளும் கொள்ளையடிக்கப் பட்ட நாடுகள்தானே.

8—9—40.

யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து 4,323,000 டன் நேயக்கப்பல்களை அமிழ்த்தி விட்டதாக ஜெர்மனி கணக்குக் கொடுக்கிறது. இது வழக்கம் போல், உள்ளதை இரட்டித்தோ, அல்லது அதற்கும் அதிகமாக்கியோ, கொடுக்கும் பொய்க்கணக்கு. உண்மையில் நஷ்டம் 1,929,679 டன்தான்.

சனிக்கிழமையன்று லண்டனில் நடந்த விமானச்சண்டை, இது வரையில் நடந்த எதிர்ப்புகளைக்காட்டிலும் கொடுமையானது. சண்டையில் சேராத ஊரார்களில் 360 பேர்கள் இதில் இறந்தார்கள்; 1,337 பேர்களுக்கு பலத்த காயம் ஏற்பட்டது. இது கொடுமையேயொழிய வீரத்தனமில்லை. இதைத் தனக்கு மகத்தான வெற்றியென்றும், இதில் தனக்கு நஷ்டம் கொஞ்சம்தானென்றும், ஜெர்மனி சொல்லிக்கொண்டு, வெகு சந்தோஷப் படுகிறது. சிப்பாய்களல்லாத பெண்களையும், குழந்தைகளையும் கொன்றதில் என்ன பெருமையோ தெரியவில்லை! ஜெர்மனியின் விமான நஷ்டமும் கொஞ்சமல்ல. அன்று மட்டும் 103 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன.

9—9—40.

சனிக்கிழமை இரவு ஜெர்மன் விமானங்கள் 103-ம் மறுநாள் 47-ம் அழிக்கப்பட்டன. நிலபீரங்கியால் ஒரு விமானம் அடிபட்டது; கடலில் மற்றொரு விமானம் விழுந்தது; இதுதான் அன்று ஏற்பட்ட நஷ்டமென்று ஜெர்மனி ஒலிபரப்புகிறது !!!

B—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

3—9—40.

'பிரிடிஷ் ஆக்ஷி நமக்கு அலுத்துப்போய் விட்டது' என்று லண்டன் நிருபர் எழுதி அமெரிக்கா டிரிப்யூன் (Tribune) பத்திரிகை சொல்லுவதாக ஜெர்மனி ஒலிபரப்புகிறது. இது புரியவில்லை. பிரிடன் அமெரிக்காவை ஆளவில்லையே? அமெரிக்கா ஏன் அலுப்புப்படவேணும்?

5—9—40.

பிரிடனில் ஆகாரப் பஞ்சம் ஏற்பட்டு விட்டதென்று பிரிடிஷ் கப்பல் படை இலாகா சொல்லிவிட்டதாக ஹிந்துஸ்தானியில் ஒலிபரப்பப்பட்டு இருக்கிறது. ஆகாரத்துக்கும், கப்பல்-இலாகாவுக்கும் என்ன சம்பந்தம்? முற்றுகை போடுவதுதானே கப்பல்-இலாகா காரியம். அந்தக்காரியத்தை கப்பல்—படை—இலாகா நன்றாய் செய்துவருகிறது. முற்றுகையைப் பொருக்க முடியாமல் சமீபத்தில், ஹிட்லர் ஓலமிட்டார். 'சண்டை ஆரம்பித்து ஒரு வருஷம் ஆய் விட்டபோதிலும், சென்ற வருஷத்தைக் காட்டிலும், இப்பொழுது ஆகாரப்பொருள்கள், இங்கிலாந்தில், தாராளமாய் இருக்கின்றன' என்று பிரிடிஷ் ஆகார-இலாகா மந்திரி சொல்லியிருக்கிறார். பிரிடனில் பஞ்சமென்ற பயமே கிடையாது.

தென்-ஆபிரிக்கா எதிரிகளோடு சமாதானம் செய்துகொள்ள, முடிந்த பிரயத்தனத்தைச் செய்ய வேண்டுமென்று ஜென்ரல் ஹெர்ட்ஸாக் (Hertzog) சொன்னதாக வங்காள பாஷையில் ஒலிபரப்பப்பட்டிருக்கிறது. ஜென்ரல் ஹெர்ட்ஸாக் கக்ஷி சிறிய கக்ஷி. இதற்கு எதிரிடையாக, 'எதிரிகளைத்தோற்கடித்து வெற்றியடைந்த பிறகுதான் நாம் சமாதானப் பேச்சைப் பேச வேண்டும்' என்று சொல்லி, 634,000 தென்-ஆபிரிக்கர்கள் ஸெப்டம்பர் 6-ம் தேதி, ஜென்ரல் ஸ்மட்ஸ் (Smuts)க்கு மனுச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

முகம்மதியர்களுக்குப் பிரதம குரு காலிப் (Caliph) என்பவர். இவர் ஆக்ஷியை பிரிடன் கெடுத்துவிட்டதாக, அராபி பாஷையில், இதாலி ஒலிபரப்புகிறது. இது துருக்கிக்கல்லவோ பாதகம்; இதாலி இதைப் பற்றிப் பேசுவானேன்? சொந்த பலக்குறைவால் காலிபினுடைய ஆக்ஷி தானகவே குறைந்ததே ஒழிய, மற்றொருவரும் அதை அழிக்கவில்லை.. 'வாலிபத் துருக்கிக் கக்ஷி' (The Young Turk Party) யார்கள் தலைப்பட்டு, முதலில் 1908-ல் சுல்தான் அப்தல் ஹமீதை நீக்கி, ஜன-நாயக-ஆக்ஷியை ஸ்தாபித்தார்கள். பிறகு முஸ்டாபா கேமால் பாஷா காலிப்—ஆக்ஷியை நிறுத்தி விட்டார். இதாலி முதலான வெளி—தேசச்சேஷ்டையால் காலிப்—ஆக்ஷி ஒழிந்தது. கிருமியன் (Crimean) யுத்தத்தில் பிரிடன், துருக்கி கக்ஷியில் சண்டை செய்தது. சென்ற 1914-யுத்தத்தில் பிரிந்து நின்றதைத்தவிர, பிரிடனும், துருக்கியும், எப்பொழுதும், ஒரே கக்ஷியாகத்தான் சண்டை செய்திருக்கின்றன. ஆனால் திருபோலி (Tripoli)யில் ஆன்வர் பாஷாவோடு இதாலி சண்டை செய்தது.

9—9—40.

'விமானங்களைக்கொண்டு 22 தடவை, லண்டனை எதிர்த்து, நகா வாசிகளனைவர்களையும் சம்ஹாரம் செய்து விட்டதாக' ஜெர்மனி ஒலி பரப்பி இருக்கிறது. லண்டனில் 80 லக்ஷம் ஜனங்கள் வசிக்கிறார்கள். இவர்கள் அனைவரும் இறந்து விட்டது உண்மையானால், தினந்தோறும் செத்த நகரத்துக்கு வந்து வெடிகளை ஏன் மேன்மேலும் ஜெர்மனி போட வேண்டும்.

பிரிடனுக்கு ஏற்பட்டிருக்கும் விமான நஷ்டத்தை ஜெர்மனி அதிகப் படுத்தி சொல்லுகிறது. ஜெர்மனியைவிட அதிகமாக இதாலி புளுகுகிறது. பிரிடனுக்கு 8,000 விமானங்கள் நஷ்டமென்றும், ஜெர்மனியின் நஷ்டம், 1,050 விமானங்கள்தான் என்றும் இதாலி இன்று ஒலி பரப்பியிருக்கிறது. உள்ளபடி, இந்த ஒரு வருஷத்தில் பிரிடனுக்கு 1,009 விமானங்களும், ஜெர்மனிக்கு 5,000 விமானங்களும் நஷ்டமாகியிருக்கின்றன.

புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் XII.

1940—

				மணி.
செப்டம்பர் 28,	சனிக்கிழமை ...	டவுன் ஹால் ...	மாலை	6.30
29,	ஞாயிற்றுக்கிழமை.	வேந்தம்பட்டி ...	,,	5.30
		பொன்னமராவதி ..	,,	5.30
		கீரனூர் ...	,,	5.30
		அன்னவாசல் ...	,,	5.30
30,	திங்கட்கிழமை ...	வேங்கடகுளம் ...	,,	5.30
		குழிபிரை ...	,,	5.30
		ராங்கியம் ...	,,	5.30
		திருமயம் ...	,,	5.30

பிரஸங்கம் XIII.

அக்டோபர் 12,	சனிக்கிழமை ...	டவுன் ஹால் ...	மாலை	6.30
13,	ஞாயிற்றுக்கிழமை.	புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம்.	,,	5.00
		மிதிலைப்பட்டி ...	,,	5.30
		காரையூர் ...	,,	5.30
14,	திங்கட்கிழமை ...	காலேஜ் (A) ஆங்கிலம் ...	காலை	10.25
		ராணி பெண்பாடசாலை ...	,,	10.25
		கரம்பக்குடி ...	மாலை	5.30
		வேகுபட்டி ...	,,	5.30
15,	செவ்வாய்க்கிழமை.	காலேஜ் (B) தமிழ் ...	காலை	10.25
		விராலிமலை ...	மாலை	5.30
		நச்சாந்துபட்டி ...	,,	5.30
		பனையபட்டி ...	,,	5.30
		புதுக்கோட்டை டவுன் சாந்தார் கோவில் அம்மன் சன்னதி.	,,	6.30
16,	புதன்கிழமை ...	லேடீஸ் கிளப் (ராணி ஸ்கூல்).	மாலை	5.00
		குருவிக்கொண்டான் பட்டி.	,,	5.30
17,	வியாழக்கிழமை ...	புதுக்கோட்டை டவுன் உபாத்தியாயர்கள் சங்கம்.	,,	3.30
		புதுப்பட்டி (பொன்னமராவதி).	,,	5.30
		ஆலங்குடி ...	,,	5.30
18,	வெள்ளிக்கிழமை...	C.S.M. பள்ளிக்கூடம் ...	காலை	10.00

Sri Brihadamba State Press, Pudukkottai. 4,400—28-9-40.